

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்குப் பகுதி, 23 வது வட்டம், புழல் காந்தி தெருவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, வட்ட துணைச் செயலாளர் வக்கீல் டி.ராஜாராம் ஏற்பாட்டில், மாதவரம் வடக்குப் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையிலும், வட்டக் கழகச் செயலாளர் பி. எஸ்.சந்துரு முன்னிலையிலும், அறுசுவை உணவை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு வழங்கினார். இதில் வட்ட அவைத் தலைவர் து.எழில்குமார், மேச்சிலா உதயகுமார், எம்.விக்னேஸ்வரன், சொ.சரவணன், வே.ரவி, டி.நெல்சன் ராஜ், எச்.பீர்முகமது, எஸ்.முத்துவேல், க.ந.க. சைமன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் அமுதா, சுதா, புழல் எழில்ராவணன், அப்துல் சமது, அசோகன் உள்ளிட்ட பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பெண்கள் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி:

# சாம்பியன் பட்டம் வென்றது இந்தியா!

மஸ்கட், டிச.16

9வது பெண்கள் ஜூனியர் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டி (21 வயதுக் குட்பட்டோர்) ஓமன் தலைநகர் மஸ்கட்டில் நடைபெற்றது.

லீக் சுற்று முடிவில் சீனா, இந்தியா, ஜப்பான், தென் கொரியா ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

நேற்று நடந்த முதல் அரையிறுதியில் நடப்பு சாம்பியன் இந்திய அணி, ஜப்பானை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது. மற்றொரு அரையிறுதியில் தென் கொரியாவை சீனா வீழ்த்தியது.

இந்நிலையில், நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா, சீனா அணிகள் மோதின. முதல் பாதியில் சீனா 10 என முன்னிலை பெற்றது. போட்டியின் முடிவில் இரு அணிகளும் 11 என சமனிலை பெற்றது.

இதையடுத்து, ஷூட் அவுட் முறை கொண்டு வரப்பட்டது. இதில் இந்திய அணி 42 என்ற கணக்கில் சீனாவை வென்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.



சைதை மேற்கு பகுதி 139 அ வட்டத்தில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வெ.புருசோத்தமன் தலைமையில் சை.மு.சேகர், எம்.எஸ்.ஹரிபாபு முன்னிலையில் நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். பகுதி செயலாளர் எம் .கிருஷ்ணமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர். எம்.ஸ்ரீதரன் ஆகியோர் 500 பேருக்கு பிளாஸ்டிக் டப் வழங்கினர்.. உடன்.திருப்பூர்.ரஜினி செல்வம், மு.தமதி, களக்காடி. எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், டி.என்.சிவமணி, மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி.தியாகராஜன், பூபதி.வெங்கடேசன் ஆகியோர் உள்ளனர்.

முதற்கட்டமாக 7 திருக்கோயில்களில்

# பக்தர்கள் தரிசன அனுபவம் குறித்த மின்னணு ஆலோசனைப் பெட்டிகள்!

## வடபழனியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச.16-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சென்னை, வடபழனி, வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் உபயதாரர் நிதியில் ரூ.33.85 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட வெள்ளி கதவுகளை ஒப்படைத்து, ரூ.10 லட்சம் செலவில் பக்தர்களின் வசதிக்காக மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டி வசதியினை தொடங்கி வைத்தார்.

மேலும், பக்தர்கள் தங்களது தரிசன அனுபவம் குறித்த மதிப்பீட்டினையும், ஆலோசனைகளையும் அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு ஆலோசனைப் பெட்டி வசதியினையும் தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருவதோடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் நிறைவேற்றி வருகிறது.

இந்து சமய அறநிலையத் துறை மானியக்கோரிக்கை அறிவிப்பில்,“48 முதுநிலைத் திருக்கோயில்க ளில் பக்தர்கள் தங்களது தரிசன அனுபவம் குறித்த மதிப்பீட்டினை அளிக்கும் வகையில் மின்னணு ஆலோசனைப் பெட்டிகள் வைக்கப்படும்” என்றும், “சென்னை மாவட்டம், வடபழநி, வடபழநி ஆண்டவர் திருக்கோயில் மூலவர் சன்னதி மரக்கதவில் வெள்ளித் தகடு போர்த்தும் திருப்பணி ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் செய்யப்படும்” என்றும் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று சென்னை, வடபழனி, வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் உபயதாரர் நிதியில் ரூ.33.85 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்ட வெள்ளி கதவுகளை திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து, ரூ.10 லட்சம் செலவில் பக்தர்களின் வசதிக்காக மூலஸ்தானத்தில் அமைக்கப்பட்டுள்ள குளிரூட்டி வசதியினை தொடங்கி வைத்தார்.

மேலும், திருக்கோயி ல்களுக்கு வருகை தரும் பக்தர்கள் தங்களது தரிசன அனுபவம் குறித்த மதிப்பீட்டினையும், ஆலோசனைகளையும் திருக்கோயில் நிர்வாகம் மற்றும் துறைக்கு அளிக்கும் வகையில் முதற்கட்டமாக, வடபழனி, மயிலாப்பூர், திருவொற்றியூர், பழனி, திருத்தணி, ஸ்ரீரங்கம் மற்றும் மருதமலை ஆகிய 7 திருக்கோயில்களில் மின்னணு ஆலோசனைப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள மின்னணு ஆலோசனைப் பெட்டி வசதியினை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், இணை ஆணையர்கள் திருமதி இரா.வான்மதி, திருமதி ஐ.முல்லை, திருக்கோயில் தக்கார் ல.ஆதிமூலம், துணை ஆணையர்கள் இரா.ஹரிஹரன், திருமதி எம்.ஜெயா, உபயதாரர்கள் திருமதி சுதா ஆதிமூலம், பி.கணேஷ் பிரசாத், ரோஹித் ரமேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி இன்று (16.12.2024) பொதுக் கூட்டம் - நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வுகளின் விபரம்!



### மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

| வ. எண் | வட்டம் | தலைமை | இடம் | சொற்பொழிவாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 109 | க.சிட்டிபாபு வட்டக் கழக செயலாளர் | திருவேங்கடபுரம் 2வது தெரு (ஸ்ரீ பெருமாள் கோவில் அருகில்), சென்னை-94 | **சிவாஜி கிருஷ்ணமூர்த்தி** தலைமைக்கழக பேச்சாளர்<br>**டெக்சின் ரொமேரியோ** தலைமைக் கழக இளம் பேச்சாளர் |
| 2 | 106அ | இரா.நவீந்திரகுமார் வட்டக் கழக செயலாளர் | கோ.சி.மணி தெரு பத்மநாபநகர் சந்திப்பு சூளைமேடு, சென்னை-94 | **சேலம் சுஜாதா** தலைமைக்கழக பேச்சாளர்<br>**பேரரசன்** தலைமைக் கழக இளம் பேச்சாளர் |

மேற்கண்ட நிகழ்வுகளில் மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், தலைமை செயற்குழு/பொதுகுழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர்/தலைவர், துணை தலைவர், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக மூத்த முனோடிகள், இன்னாள் முன்னாள் நிர்வாகிகள் என அனைவரும் பெருந்திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 198 வது வட்டத்தின் சார்பாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பின்படி, வட்ட செயலாளர் பா.தேவகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பகுதி செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்கினார். கழக பேச்சாளர் ஆற்காடு அகிலன், இளம் பேச்சாளர் ரா.குமுதாஸ்ரீ ஆகியோர் சிறப்புரையாற்றினார். உடன் பாலவாக்கம் மு.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஜி.வெங்கடேசன், த.பஷீர், எம்.கே.ஏழுமலை, அ.ஹரிகிருஷ்ணன், பா.அருண்குமார், எம்.பார்த்திபன், ஜெ.இ.பாண்டியன், கே.வீ.தியாகராஜன், வீ.தனசேகரன், வே.வீ.குமரேசன், கே.டி.ரவி, சாந்திபசுபதி, வ.பாபு எம்.சி, ஜி.சங்கர், அ.முருகேசன், ஆர்.நாகராஜ், த.ராஜேந்திரன், எஸ்.ஆர்.உமாபதி, எஸ்.தயாளன், ஆர் சுரேஷ்பாபு , ஹரி எஸ்.பி.ஹரி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# மனிதநேய உதயநாள்! மாபெரும் புகழரங்கம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் - அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் சிறப்புரை!

சென்னை, டிச.16-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்22, உதயத்தின் எழுச்சி! உலகத்தின் மகிழ்ச்சி! எனும் தலைப்பில் மாபெரும் புகழரங்கம் நேற்று முன்தினம் (14.12.2024 - சனிக்கிழமை) மாலை 06.00 மணியளவில், சென்னை, ஏழுகிணறு, குளோப் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நலத்திட்ட விழாவில், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர் பி.செந்தில்குமார் தலைமை வகித்தார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எஸ்.இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், எம்.விஜயகுமார், ஜி. எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட்ஆசாட் எம்.சி, என்.பி.எம்.சேக் அப்துல்லா, டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், எம்.இப்ராஹிம்கனி, இரா. கலைச்செல்வி, பி.விஜய குமார், எம்.வினாயகம், பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், முன்னிலை வகிக்கின்றனர். வி.எல்.யஷ்வந்த், எம். எஸ்.அசாருதீன், எ.சுமன் ராஜ், கே.பாலாஜி, எஸ்.இம்ரான்கான், டி.பிலிப்ஸ், பி. விஷ்ணு, எ.திருப்பதி, கே. சூரியபிரகாஷ், என்.மோகன், எ.ஆனந்த், எம்.சண்முகசுந்தரம், ந.சுந்தரம், எஸ். சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே. ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துகுமார், த. கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், மா. ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், டி.சதீஷ்குகுமார் ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தில் பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் பட்டை தீட்டப்பட்ட இளம்பேச்சாளர்கள் செங்கல்பட்டு தே. சிலம்பரசன் “இளைஞர் படை எழுதும் விடை” எனும் தலைப்பிலும், காஞ்சிபுரம் ச.பேரரசன் “கதிரொளியின் பேரொளி களமாடும் போராளி” எனும் தலைப்பிலும் சிறப்புரையாற்றினர்.

மேலும், இந்நலத்திட்ட விழாவில், சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியா ராஜன், லண்டன் முருகன், துறைமுகம் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: தாஹா எல்.நவீன், வெ.பரிமளம், ராஜேஷ்ஜெயின் ஆகியோர் சிறப்பித்தனர்.

வட்டகழக செயலாளர்கள் எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ.அஸ்லாம் நன்றி கூறினார்கள்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா! ஆர்.டி.சேகர் வழங்கினார்! வடசென்னை ந.மனோகரன் முன்னிலை!

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் 1048 பேருக்கு அறுசுவை உணவு!

## கலாநிதி வீராசாமி - ஐட்ரிம் ஆர்.மூர்த்தி - ஜெ.ஜெ.எபினேசர் பங்கேற்பு! ந.ம.மகேஷ்குமார் தலைமை!

சென்னை, டிச.15-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் 1048 நபர்களுக்கு அசைவ சமபந்தி விருந்து வழங்குதல் நிகழ்ச்சி நேற்று (15.12.2024) பகல் 11.30 மணி அளவில் 48வது வட்டம் சோலையப்பன் தெருவில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ந.ம. மகேஷ்குமார் தலைமை வகித்தார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் வடசென்னை ந. மனோகரன், பகுதி செயலாளர்கள் வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ. சு.சத்யநாராயணன், இரா.பாலன், எம்.கே.இஸ்மாயில், கு. ரமேஷ், எஸ்.திருஞானம், இ.மதன், வி. மலையம்மாள், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர் பி. முருகன், ஜே.கௌரிஸ்வரன், பாலா லட்சுமணன், ந.ம. தினேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ந.குமார், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி. சதீஷ், நீ.எழிலரசன், எஸ். சதீஸ்வரி, என். வேதா, ந.மணிமாறன், எஸ்.ரமேஷ், எஸ்.யுவராஜ், பி.கே.முரளிதரன் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சமபந்தி விருந்தினை துவக்கி வைத்து சிறப்பித்தார்.

மேலும் இவ்விழாவில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐ ட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, பி.டி.பாண்டி செல்வம், டாக்டர் சுபேர் கான், மு.கோபி, க.நாகம்மை, வே.சிவகுமார், கி.ராஜேந்திரன், நா.சண்முகம் லியோ டி.சுரேஷ், எம்.தீனதயாளன், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமி வேலு, ப. சோமசுந்தரமூர்த்தி, லியோ கே.மதன், ஜே.கே.நாதன், மாமன்ற உறுப்பினர்கள் விஜயலட்சுமி, பா.வேளாங்கண்ணி, கீதா சுரேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக கு.பிரவீன் குமார் நன்றி கூறினார்.



சென்னை மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுக்கூட்டம் வட்ட கழக செயலாளர் ஆர். ஜெகதீசன் எம்.சி. தலைமையில் பகுதிக் கழக செயலாளர் எஸ். மதன்மோகன் எம்.சி. முன்னிலையில் நலத்திட்ட உதவிகளை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் கே. சிற்றரசு எம்.சி. வழங்கினார். தலைமைக் கழக பேச்சாளர்கள் சைதை. சாதிக், பி.லேகா ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் கே.மகேஷ், பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபி, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன் மற்றும் எஸ்.கே.ராஜ், எம்.எல்.பி.இளையராஜா, எஸ்.சுகேந்திரன், பி.பாலசந்தர், என்.தணிகாசலம், சி.சாய்குமார், என்.சுரேஷ், ஜி.ஜே.கிரிதரன், எம்.ராமச்சந்திரன், என்.கலைமகர், எம். மதிமன்னன், ஆர்.மணி (எ)தேவராஜ், டி.விஜயகணபதி, பி.ஆர்.பாலாஜி, பி.ஜெயவேல், எம்.சுதாகர், எம்.துரைசாமி உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.